# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.29/2025**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 02-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | அஜித்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜ்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | சவரான்காடு | வயது | - | 29/2026 |
| சாதி | - | | | | |

**27.01.2026**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, திருப்பூர் பனியன் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ரமேஷ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. ஆஜர் எதிரி எனது அப்பா ஆவார். நான் போலீஸிடம் வழக்கு சம்பந்தமாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை. கடந்த 25.06.2025-ம் தேதி காலை 09.00 மணியளவில் எனது அத்தை ஏசுமேரி இடுப்பில் பிளாஸ்டிக் மைக்கா கட்டிக்கொண்டு இருசக்கர வாகனத்தில் எனது அப்பாவுடன் பின்னால் அமர்ந்து சென்றார். புதுத்தோட்டம் ஆலமர கோவிலுக்கு முன்பாக வளையில் திரும்பும் போது எனது அத்தை வண்டியில் இருந்த பின்புறமாக விழுந்ததில் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டார். பின்னர் பொள்ளாச்சிக்கு மேல் சிகிச்சைக்காக செல்லும் போது வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 28.06.2024-ம் தேதி குற்ற எண் 87/2024-ன் வழக்கு தொடர்பாக வால்பாறை காவல் நிலைய போலீசார் சம்பவயிடமான பத்தோக்கரா காடு அருகில் விசாரணை செய்து கொண்டிருந்த போது, நானும், தியாகு என்பவரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. அப்போது, போலீசார் எங்கள் முன்பாக விபத்து சம்பந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், தியாகு என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u> இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம். திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.